# சிக்கினான் மகேந்திரன்... சிறைக்குள் தள்ளியது போலீஸ்!

## அதிரடி நடவடிக்கை எடுத்த காவல் அதிகாரிகளுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் ஒன்றியம் வாட்டாகுடி வடக்கு கிராமத்தில், கலப்பட மதுவும், கள்ள லாட்டரியும் விற்று வரும் மகேந்திரன் மீது நடவடிக்கை எடுக்க கோரி, கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நமது, 'அரசியல் ஒற்றன்' இதழில் செய்திகளை பதிவு செய்துவந்தோம்.

ரவளிப்பிரியா ஐ.பி.எஸ்.



அதே போல் நமது மூத்த பத்திரிகையாளரின் ஒட்டுனரான அரவிந்தன் மற்றும் அவனை பட்டுக்கோட்டை பஸ் நிலையம் இறக்கிவிட சென்ற சதிஷ் என்பவரையும் தாக்கிய கலப்படமது விற்பனையாளரான மகேந்திரன் மற்றும் வாட்டாகுடியில் வசிக்கும் சிலராலும், இருசக்கர வாகனத்தை வேகமாக இயக்கி மோதவிட்டு, கொலை முயற்சிக்கான வழிகளை செய்து, ஒட்டுனரான அரவிந்தனின் துணி பேக் மற்றும் இருசக்கர வாகனத்தையும் வழிபறி செய்துகொண்டதையும், அவனது புதிய கைப்பேசியை பிடுங்கி சாலையில் வீசி உடைத்தது குறித்தும் புகார்களை நாம் கொடுத்து வந்த போதிலும், மதுக்கூர் போலிசாரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை .

அதே நேரத்தில் குற்றவாளிகளால் வழிப்பறி செய்த எந்த பொருட்களையும் காவல் நிலைய அதிகாரிகளால் பெறப்பட்டோ அல்லது காவல் நிலையத்தில் ஒப்படைக்க உரிய உத்தரவுகளை வழங்கியோ, அல்லது காவல் அதிகாரிகளால் அவை அத்தனையும் குற்றவாளிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு காவல் நிலையத்தினரால் பத்திரப்படுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டதா என்றால் அதுவும் இல்லை.

மேலும் கலப்பட மது மற்றும் கள்ள லாட்டரி விற்பனையாளரான மகேந்திரனால் வரப் பெறும் லஞ்ச வருமானத்தின் விசுவாசம் காரணமாகவும், SBHC–யின் ஊழலாலும், அவரது அதிகார துஷ்பிரயோகத்தாலும், மதுக்கூர் போலீசில் நம்மால் வழங்கப்பட்ட புகாருக்கு இந்த செய்தி அச்சில் ஏறும்வரை (27–06–22)நடவடிக்கை இல்லை.

அதே நேரத்தில், இந்த வாட்டாகுடி கிராமம், நமது மூத்த பத்திரிகையாளரின், மனைவியின் சொந்த ஊர் என்பதால், அந்த ஊரில் நடக்கும் முறையற்ற செயல்கள், அனைத்தும் நமது கவனத் திற்கு வந்தாலும், அவைகளை பத்திரிகை நாகரீகம் கருதி பல தவறுதல்களான முறையற்ற சங்கதி


அரசின் நலத்திட்டங்களை ஊழல் செல்லரிக்க செய்கிறது

மாமூல் வாங்கும் போலீசார் மீது குற்ற நடவடிக்கை

தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

களை வெளியிடுவது பற்றி தவிர்த்து வந்தாலும், மகேந்திரன் போன்றவர்களின் சமூக விரோத தொழில்கள் பற்றிய செய்திகள் வெளியிடுவது என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.

மேலும், வாட்டாகுடியினரால் அரவிந்தன் மேல் வைக்கப்படும் குற்றத்தை போல்,அதே குற்றத்தை அரவிந்தனை தாக்கிய மற்றும் வாட்டாகுடியின் பஞ்சாயத்தார்கள் மீதும் கூறப்படுவதால், அவர்கள் அனைவர் மீதும் உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு வழியாக, தற்போது, மகேந்திரனின் சமூக விரோத தொழிலுக்கு, அதிராமபட்டிணம் காவல் ஆய்வாளரும் மதுக்கூர் காவலின் பொறுப்பு ஆய்வாளரான அண்ணாதுரை அவர்களது அதிரடியாலும், மாவட்ட எஸ்.பி.யின்



திருச்சி ஐஜி சந்தோஷ்குமார்



டிஜிபி சைலேந்திர பாபு

நேரடி கவனிப்பில் நடந்த அதிரடிகளால் மட்டுமே, மகேந்திரன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

இதில் துரதிர்ஷ்டமாக மகேந்திரனின் உடன் பிறந்த சகோதரர் பாலு என்ற பாலசுப்பிர மணியன் மீதும் கலப்படமது விற்றதாக அவரது இல்லத்தில் இருந்தும் 27–பாட்டில்களை கைப்பற்றிய பட்டுக்கோட்டை கலால் போலீசாராலும் பாலு – மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்ற செய்திகள் நமக்கு வந்தாலும், அது நமக்கு மிகுந்த மனவருத்தத்தை யும் தந்தது.

ஏனெனில், மகேந்திரனின், தரங்கெட்ட பேச்சுக்கள், அவனது அடாவடிகள், நமது ஒட்டுனரை தாக்கிய அவனது ரௌடித்தனமான கொலைவெறி தாக்குதல்கள் மற்றும் முறையற்ற திமிர்தனமான பேச்சுக்கள் அவனது செயல்கள் எல்லாம், ஒட்டுமொத்த அவனது குடும்பத்தில் உள்ளவர்களின் நிலைகளையும் பாதிக்க செய் கிறது என்பதோடு, வாட்டாகுடியில் இவனிடம் ஒசி குடியில் கலக்கும் சில பஞ்சாயத்தாரர்களும், கடனுக்கு வாங்கி குடிபாட்டில்களின் கூட்டணி அமைக்கும் அரசியல் கட்சியை சேர்ந்த சிலரது உக்ர வன்மங்களும் வெளிப்புறத்திற்கு வெளி யேறவும் மகேந்திரனே மிகப் பெரும் காரணமாக விளங்க போவதுதான் மிக கொடூரமான ஒன்றாகவே நிலைக்க போகிறது.

நாம் அறிந்தவரை இந்த சமூக விரோத தொழிலை செய்து வந்த மகேந்திரன் தான் கலப்பட மது – விற்பனையினைக்கும் காரண மானவர். லாட்டரி வழக்கை மட்டும் ஏற்ற மகேந்திரன், தனது சகோதரர் பாலுவை கலப்பட மது வழக்கில் சிக்க வைத்துவிட்டு ஆளுக்கு ஒரு வழக்கை ஏற்பும் சூழ்நிலையை உருவாக்கி, அதனையே காவல்துறை அதிகாரிகளாலும் செயல்பட வைத்து, கலால் காவலின் நேர்மைகளை சந்தேகிக்கவோ, அவரது அதிரடிகளையோ குறைகளை சொல்ல எந்த தடயங்களும் இல்லாதபடி கலால் போலீசாரும் தங்களது அதிரடிகளை செய்து பாலுவையும் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டனர்.

அதே நேரத்தில் மகேந்திரனிடம் பெற்ற வார மாமுல் லஞ்சத்திற்காக, மகேந்திரன் பெயரிலே லாட்டரி வழக்கு மற்றும் கலப்படமது விற்பனையின் இரு வழக்கை யும் பதிந்திருந்து, மகேந்திரனின் சகோதர ரான பாலுவின் கைது சமாச்சாரத்தை தவிர்த்திருந்தால், மகேந்திரனை சிறையில் இருந்து பிணையில் வெளியில் எடுப்பதற்கு பாலு – வின் உதவிகள் பேருதவியாக அமைந்துவிடும் என்பதாலோ என்னவோ மகேந்திரனின் சகோதரர் பாலுவின் மீதும், பட்டுக்கோட்டை கலால் போலிசார்களால் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு விட்டாரோ என்றுதான் தோன்றுகிறது. என்றாலும் பாலு வீடு இருக்கிற இடத்திலே அடுத்தடுத்து இருக்கிற மகேந்திரன் வீட்டில் இருந்து எடுக்க வேண்டிய சரக்கு பாட்டில்கள், பாலு வீட்டில் இருந்து 27 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதால் பாலு மீதும் வழக்குகள் பாய்ந்து விட்டது.

அதே நேரத்தில், நமது மூத்த பத்திரிகை யாளரின் ஒட்டுனரான, அரவிந்தன் சென்னை வருவதற்காக தனது வாகனத்தில் சதிஷ் என்பவரை அழைத்துக்கொண்டு பட்டுக்கோட்டை

பஸ் நிலையம் சென்ற போது சதிஷ் என்பவரை தாக்கியும், அரவிந்தனின் துணி பேக்கையும், மற்றும் புதிய இரு சக்கர வாகனத்தையும் பிடுங்கிய மகேந்திரனோடு, வெற்றிவேல், கோபி, ரங்கராஜ், ஆகியோராலும், சமூக விரோத தொழில் நடத்துபவர்களோடு தொடர்பில் உள்ள சில நபர்களாலும், அரவிந்தனின் வாகனம் மற்றும் துணி பேக்களையும் வழிப்பறி செய்து பறித்துக் கொண்டனர்.

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி நமது மூத்த பத்திரிகையாளரால் கொடுக்கப் பட்ட புகார்களும், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் அவர்களது தனிப்பிரிவை சேர்ந்த மதுக்கூர் காவல் நிலைய SBHC–செந்தில்குமாரின் மாமூல் குறித்த புகார்களும், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே நமது மூத்த பத்திரிகையாளரால் கொடுக்கப் பட்டும் இதுவரை எந்த புகார்கள் மீதும் நடவடிக்கை இல்லை. புகார் குறித்த விசாரணை களும் உரியவர்களிடம் விசாரிக்கப் படவும் இல்லை என்பதால், மகேந்திரன் மீது கொடுக்கப்பட்ட புகார் குறித்து மாவட்ட எஸ்.பி–யின் கவனத்திற்கு அவரது கைப்பேசியில் பேசி நேரடியாக கொண்டு சென்றதும் மகேந்திரன் மீது மட்டும் தற்போது உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவனும் சிறைக்குள் தள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு விட்டது.

பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்.





இறையன்பு ஐ.ஏ.எஸ்.

அதே நேரத்தில், நமது மூத்த பத்திரிகையாளரின் ஒட்டுனரும் மற்றும் அவரை பட்டுக்கோட்டை பஸ் நிலையம் விடுவதற்காக சென்ற சதிஷ் என்பவர் தாக்கப்பட்டது குறித்தும், அந்த ஒட்டுரான அரவிந்தனிடம் இருந்து வழிப்பறி செய்த துணிபேக், மற்றும் புதிய இருசக்கர வாகனத்தையும், அதனை, இன்றுவரை அந்த வாட்டாகுடியின் அக்கிரமக்காரர்களின் கஸ்டடி யில் இருப்பதையும் பதிவு செய்து நடவடிக்கைக்கு கோரி மீண்டும் எஸ்.பியின் கவனத்திற்கும், எஸ்.பியின் தனிப்பிரிவு ஆய்வாளர் மணிவேல் அவர்களது கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளோம்.

எனவே ஒட்டுனர் அரவிந்தனின் புதிய கைபேசியினை பிடுங்கி தார் சாலையில் வீசி உடைத்து இருசக்கர வாகனத்தையும் துணி பேக்யையும் பிடுங்கிய வெற்றிவேல் மற்றும் கோபி ஆகியோர் மீதும், மற்றும் 'மங்காய்' வீட்டை சேர்ந்த ரெங்கராஜ், தனது இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தை வைத்து மோதி கொலைவெறி தாக்குதலை செய்தும் அரவிந்தன் மற்றும் சதீஷ்ஸை தாக்கி தரையில் சாய்த்தும், இருசக்கர வாகனத்தை அவர்கள் மீது மோதி ஏற்றப்பட்ட கொலை முயற்சிக்கான குறித்த புகாரை விசாரிக்க கோரி கொடுக்கப்பட்ட புகார் குறித்தும், மதுக்கூர் போலீசாரால் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதையும் நம்மால் கொடுக்கப்பட்ட புகாரிகளில் சுட்டிக் காட்டி பதிவு செய்ததோடு, பாதிக்கப் பட்டவர்களுக்கு எதிராக மதுக்கூர் போலீசார் செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், நீதி கேட்டு முறையிடும் மூத்த பத்திரிகையாளர் மீதும், அவரது ஒட்டுனர் அரவிந்தன் மீதும் பொய் வழக்கு புனைந்திட மதுக்கூர் காவல் SBHC செந்தில்குமார் பல்வேறு முயற்சிகளையும் மகேந்திரன் மூலம் தொடர்ந்து வந்தார். இருந்தாலும் அவை அத்தனையும் முறியடிக்க நமது மூத்த பத்திரிகையாளராலும் 91 CrPC மற்றும் 160 CrPC படியான அழைப்பாணையை கோரி மனு ஒன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பியும், பதிவு தபால் வழியாகவும் அனுப்பப்பட்டது.

எனவே இது குறித்து மதுக்கூர் காவல் நிலையத்தில் அனைவரிடமும் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு தவறிழைத்தவர்களுக்கு தகுந்த தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

மேலும், நமது உடல் உபாதைகளால் அதாவது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையும், முதுகு தண்டுவட அறுவை சிகிச்சையும் செய்த நிலையில், பயணங்கள் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தபோதிலும், உரிய நியாயம் வேண்டி, நம்மால் கொடுக்கப்பட்ட புகாருக்கு நியாயம் கோரி, 91CrPC மற்றும் 160 CrPC அழைப்பாணையை கோரி மின்னஞ்சல், மற்றும் விரைவு தபாலில் PROOF OF DELIVERYயோடு அனுப்பப்பட்டும் கடந்த இரண்டரை மாதமாக நிலுவையில் நிறுத்தி வைத்து புகார்கள் விசாரிக்கப்படாமல் இருக்கிறது என்றால் இந்த மதுக்கூர் காவல் நிலையத்தின் செயல்பாடுகள்




**காவல் அதிகாரியையே தாக்கிய அதே குற்றவாளிகளால் நமது ஒட்டுனரும் தாக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடக்கூடிய செய்தியாகும்.**

எந்த லட்சணத்தில் உள்ளது என்பதை இனியும் நாம் உயரதிகாரிகளுக்கு சொல்லி தெரிய வேண்டியதில்லை.

மேலும், கடந்த 21–04–2022, 22–04 – 2022 ,23–04–2022, 24–04–2022, 25–04–2022, 26–04–2022, மற்றும் 19–05–2022–ல் மாண்புமிகு முதல்வர், மற்றும் திருமிகு. C.S., H.S. காவல் துறை தலைவர், (DGP), மற்றும் திருச்சி ஐ.ஜி., தஞ்சாவூர் மாவட்ட காவல் கண் காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், பட்டுக் கோட்டை துணை காவல் கண்காணிப்பாளர், மதுக்கூர் காவல் நிலைய ஆய்வாளர் என அனைவரது கவனத் திற்கும் மின்னஞ்சல் மற்றும் தபாலிலும் அனுப்பி வைக்கப்பட்டும், தற்போது மகேந்திரனின் லாட்டரி வழக்கில் மட்டும் கைது காட்டப்பட்டு மாவட்ட எஸ்.பி. அவர்களால் அதிரடி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

ஆனால், நமது ஒட்டுனரை இரு சக்கர வாகனத்தை வைத்து மோத வைத்து கொலை வெறி தாக்குதல் நடத்தியதோடு, ஒட்டுனரின் இருசக்கர வாகனத்தையும், அவரது துணி பேக்கையும், புதிய கைப்பேசியினை பறித்து வழிப்பறி செய்ததுக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் மதுக்கூர் போலீசாரால் எடுக்கப்படாமல் இருப்பதையும் விரைந்து முடிக்கவும், அந்த குற்ற வாளிகள் மீது வழக்கு பதிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும் பணிந்து கோரப்படுகிறது.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னெவெனில், நம்மால் கொடுக்கப் பட்ட புகாரில் உள்ள குற்றவாளிகளில் பலரும், ஏற்கனவே இதே மதுக்கூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஒரு பெண் உதவி காவல் ஆய்வாளர் ஒருவர், மதுக்கூர் முக்கூட்டு சாலையில் தனது சீருடையோடு நின்று பணி செய்துகொண்டிருந்த போது, அவரை தாக்கி, கீழே சாய்த்து, உதைத்து, மிதித்து, அவரது மேல் சட்டை பாக்கெட்டை கிழித்து, அந்த உதவி பெண் காவல் ஆய்வாளர் மானபங்கப்படுத்தப்பட்டு அசிங்கப்படுத்தப் பட்டார்.

இப்படி காவல் அதிகாரியையே தாக்கிய அதே குற்றவாளிகளால் நமது ஒட்டுனரும் தாக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடக்கூடிய செய்தியாகும்.

மேற்படி காவல் ஆய்வாளர் தாக்குதலுக்கு பின்பு, அன்றைய பட்டுக்கோட்டையின் A.S.P. ஆன அதிரடியான, நேர்மையான அதிகாரியான அன்பு IPS அவர்களால், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, வாட்டாகுடி கிராமத்தையே சல்லடை போட்டு அலசியும், குறிப்பிட்ட சிலர் சிக்கினார்களே தவிர, பெரும்பாலோனார் சிக்கவே இல்லை. அதே நேரத்தில் அந்த அதிரடி வேட்டையில் தவறிழைக்காத பலரும் தண்டைக் குள்ளாகும் நிலைக்கு வந்தார்கள். ஆனால், இன்று நம்மால் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த புகாரில், அன்று தண்டனை பெறாத பலரும் இன்று குற்றவாளியாகவும் உள்ளனர்.

எனவே, எம்மால் புகாரில் தெரிவிக்கப் படுகிற, அடையாளம் காட்டப்படுகிற அனைவர் மீதும் மற்றும் ஒட்டுனர் அரவிந்தனையும், அவரது நண்பர் சதிஷ் –யையும் கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்கள் அவர்கள் தான் தங்களது இரு சக்கர வாகனத்தை மோத விட்டு வாகனத்தை ஏற்றி கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்தான் மேற்படியாளர்கள் என்பதையும் பதிவு செய்து கொள்வதோடு, உரிய நடவடிக்கைக்கு பணிந்து கோருகிறோம்.

**- நமது நிருபர்**